PERMANENT REFERENCE

# "STUDY OF THE OBSTACLES IN THE ASSIMILATION OF JAPANES MANAGEMENT CONCEPT OF 5S IN GOVERNMENT OFFICES AND ITS IMPORTANCE."

## (SPECIAL REFERENCE TO TRINCOMALEE DISTRICT)

658.0072
KLA

PR

MR. KALIRAJAH UTHAYARAJAH.

FCM503
Project Report
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT,
FACULTY OF COMMERCE AND MANAGEMENT,
EASTERN UNIVERSITY,
SRI LANKA.

2002.

# பொருளடக்கம்.


நன்றியுரை I

ஆய்வுச் சுருக்கம் II

அத்தியாயம் - 01

1.0 அறிமுகம். 1

1.1 ஆய்வுப்பிரச்சினை. 2

1.2 ஆய்வின் நோக்கம். 3

1.3 ஆய்வின் முக்கியத்துவம் 3

1.4 ஆய்வு முறைமை 5

1.5 எண்ணக்கருவாக்கம். 9

1.6 அத்தியாய ஒழுங்கமைப்பு. 11

1.7. தடைகள். 11

1.8. வரையறைகள் 11

அத்தியாயம் - 02

2.0 அறிமுகம் 12

2.1 5S பற்றிய விடயங்கள். 12

2.2 அரச அலுவலக நிருவாகம் பற்றிய விடயங்கள். 12

அத்தியாயம் - 03

3.0 தரவுகளின் பிரதிநிதித்துவமும் பகுப்பாய்வும். 33

3.1 தனிப்பட்ட தரவுகளும் பகுப்பாய்வும். 33

3.2 மாறிகளின் தரவுப் பகுப்பாய்வு. 38

3.2.1. 5S உள்வாங்குவதில் உள்ள தடைகள். 39

3.2.2. அரச சேவையில் 5S இன் முக்கியத்துவம். 46

அத்தியாயம் - 04

4.0 தரவுகள் பற்றிய கலந்துரையாடல். 53

4.1 தனிப்பட்ட மாறிகளின் கலந்துரையாடல். 53

4.2 தரவு மாறிகள் பற்றிய கலந்துரையாடல். 56

4.2.1. 5S உள்வாங்குவதில் உள்ள தடைகள். 56

4.2.2. அரச சேவையில் 5S இன் முக்கியத்துவம். 64

அத்தியாயம் - 05

5.0. அறிமுகம். 68

5.1. முடிவுரை. 68

5.2 சிபார்சுகள். 70

5.3. 5S நுட்பத்தின்படி ஒழுங்கமைப்பதற்கான படி முறைகள். 72

5.4. சம்பந்தப்படுத்தல். 77

உசாத்துணை நூல்கள். IV

வினாக்கொத்து. V

## ஆய்வுச் சுருக்கம்.

இன்று உலகிலே முகாமைத்துவம் வளர்ந்து வரும் ஒரு துறையாகும் அதாவது ஒரு சிறப்பான முகாமைத்துவம் இல்லாமல் எந்த ஒரு நடவடிக்கையும் சிறப்பாக அமையாது. அதே போல் அரச துறையும் மிகமுக்கியமாக வளர்ந்து வரும் ஒரு துறையாகும். அரசதுறை சகல வழிகளிலும் மக்களுக்கு இன்றியமையாதனவாக உள்ளது. அரச துறையின் சிறப்பான வளர்ச்சி அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கைக்கு மிக முக்கியமான ஒன்றாகும்.

வர்த்தக முகாமைத்துவ கற்கைநெறியின் பூர்த்தியை நிறைவாக்கும் பொருட்டு சமர்பிக்கபட வேண்டிய ஆய்வுச் செயற்பாட்டிற்காக பொருத்தமான தலைப்பை தேட முற்பட்ட போது எனக்கு நினைவுக்கு வந்தது எமது அரச துறை நிருவாகமும், ஜப்பானிய மக்களின் சிறப்பான அர்ப்பணிப்புக்கு எடுத்துக் காட்டான இந்த 5S நுட்பமும் தான்.

எங்களது மாவட்டத்திலே பல அரச அலுவலகங்கள் உள்ளன. அவை பல வித சேவைகளை மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியம் உள்ளது. ஆனால் இவ்அரச அலுவலகங்களில் அனேகமானவை பழைய திட்டமிடல் முறைகளிலேயே இன்னமும் உள்ளது. இவைகளில் வேலைகள் விரைவாக முடிவதில்லை, மக்களை அலைக்கழித்தல், வினைத்திறன் இன்மை, அலுவலக ஒழுங்கமைப்பு பிரச்சினை, அதாவது சுத்தமில்லாது ஊழியருக்கு இடைஞ்சலான தன்மை போன்றன காணப்படுகின்றன. ஆனால் மறுபக்கம் முகாமைநுட்பமான 5S எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை நோக்கினால் இது அலுவலக சூழலை சுத்தமாக பேணவும், சிறப்பான ஒழுங்கமைத்தலுக்கும், வினைத்திறன், வினைநிறைவேற்றத்தை ஏற்படுத்தகூடியதாகும். ஆனால் இந்த இலகுவான முகாமை நுட்பமானது நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை என்பதே உண்மையாகும். எனவே இந்த நுட்பத்தை உள்வாங்கலில் உள்ள தடைகளையும், அதனை உள்வாங்குவதற்கான முக்கியத்துவத்தினையும் ஆராய்வதே இந்த ஆய்வாகும். இவ்வாய்வு 5 அத்தியாயங்களை கொண்டதாகும்.

முதலாவது அத்தியாயம் ஆய்வு தொடர்பான அறிமுகம், ஆய்வின் பிரச்சினை, ஆய்வின் நோக்கம், ஆய்வின் முக்கியத்துவம், தரவு ஒழுங்கமைப்பு,

எண்ணக்கருவாக்கம், அத்தியாய ஒழுங்கமைப்பு, தடைகளும் வரையறைகளையும் கொண்டதாகும்.

இரண்டாவது அத்தியாயத்தில் 5S நுட்பம் பற்றியும், அரச நிருவாக அமைப்புக்கள், அதனுள் எவ்வாறு 5S நுட்பம் உள்வாங்கப்படலாம், அரச நிருவாகம் தொடர்பான மக்களின் மனப்பாங்குகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

மூன்றாவது அத்தியாயத்தில் தரவு பகுப்பாய்வும், தரவு முன்மொழிவினையும் கொண்டதாகும் அதாவது இங்கு சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட தரவு, மாறி சம்பந்தமான தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

நான்காவது அத்தியாயத்தில் சகல தரவுகள் சம்மந்தமாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது, மாறிகள் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்களும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. ஐந்தாவது அத்தியாயத்தில் அறிமுகம் முடிவுரை என்பனவும், மற்றும் இந் நுட்பம் உள்வாங்க கூடியவாறான சிபார்சுகளும், பொதுவாக 5S நுட்பத்தில் ஒவ்வொரு S உம் எவ்வாறு அமுல்படுத்தப்படலாம் என்ற படிமுறைகளும், இந்த ஆய்வின் பயன்பாடுகளும் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

ஆய்வாளன்.